## தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு - 2020

**கிறீஸ்தவம் (N . R . C )**

**பகுதி – I,II**

**தொகுப்பு**

தி. ஜொய்சி மினேவா

தமிழ்த்துறை – 3ம் வருடம்

பேராதனைப் பல்கலைக்கழகம்

**சுட்டெண் :**

**மூன்று மணித்தியாலம்**

## பகுதி -I

- **1-40 வரையான வினாக்களில் பொருத்தமான விடையை தெரிவு செய்து கோடிடுக.**

**1)** “காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்” இங்கு பேரொளி என குறிப்பிடப்படுபவர் ?

1. தாவீது
2. திருமுழுக்குயோவான்
3. இயேசு
4. மோசே

**2)** இறையரசின் பெறுமதிகளாக அமையாதது?

1. இறைபயம், நீதி, நேர்மை
2. அர்ப்பணிப்பு, நீதி, சமாதானம்
3. நேர்மை,பொருளாதார நலன், அர்ப்பணிப்பு
4. சுமாதானம், இறைபயம், நேர்மை

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

**3)** உரோம பேரசுக்கு எதிராக காலத்துக்கு காலம் எழுந்து நின்ற குழுவினரைத் தடுப்பதற்கு உரோம அரசுக்கு உதவி புரிந்த குழுவினர.?

1. பரிசேயர்
2. சதுசேயர்
3. மறைநூல் அறிஞர்
4. தலைமைக்குருக்கள்

**4)** இயேசு சிலுவையில் கூறிய இறுதி வார்த்தை

1. எல்லாம் நிறைவேறிற்று
2. தாகமாய் இருக்கிறது
3. என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்
4. பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கின்றேன்

**5)** எம்மாவூர் பயணத்தில் குறிப்பிடப்படும் சீடன்?

1. பிலிப்பு
2. கிளேயோப்பா
3. பிரேக்கோர
4. தீமோன்

**6)** இயேசு கூறிய திராட்சைச்செடி உவமையில் கொடிகள் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

1. இயேசு
2. சீடர்கள்
3. தோட்டக்காரன்
4. நாம்



kalvi.lk

7) பரிசேயர் என்பதன் அர்த்தம்

1. அனுப்பப்பட்டவர்
2. பயிற்றப்பட்டவர்
3. பிரிக்கப்பட்டவர்
4. தெரிந்தெடுக்கப்பட்டவர்

8) “தோரா” என்னும் மோசேயின் நீதிச்சட்ட நூல்களுக்குள் அடங்காத நூல்?

1. தொடக்கநூல்
2. எண்ணிக்கை
3. விடுதலைப்பயணம்
4. திருப்பாடல்

9) கெத்சமெனே செபத்தின் மையப்பொருள்?

1. வேண்டுதல்களை ஏறெடுத்தல்
2. என் விருப்பப்படி அல்ல உம் விருப்பபடியே நிகழட்டும்
3. சுகமளிக்கும் வேண்டுதல்
4. உணவு தரும்படியான வேண்தல்

10) இறையரசின் வளர்ச்சியைக் குறிக்கும் உவமைகள்?

A - கடுகு விதை B- அத்திமரம் C -நல்லசமாரியன் D - புளித்த மா

1. A யும் B யும்
2. A யும் D யும்
3. A யும் C யும்
4. A,B,C ஆகியன



kalvi.lk

11) “இப்பொழுது சிரித்து இன்புறுவோரே” ஐயோ உங்களுக்க கேடு ஏனெனில்…..

1. பட்டினி கிடப்பீர்கள்
2. துயருற்று அழுவீர்கள்
3. சிரித்து மகிழ்வீர்கள்
4. நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள்

12) பவுலின் மூன்றாவது பயணத் தோழர்களுள் அடங்காதவர்?

1. தீத்து
2. எலியா
3. தீமோத்தேயு
4. லூக்கா

Education கல்வி அධ්‍යාපන

**13)** ஆரம்பகால ஆதித் திருச்சபையில் முதல் இரத்த சாட்சியாக மரித்தவர்

1. யாக்கோபு
2. பவுல்
3. ஸ்தேவான்
4. பேதுரு

14) இயேசு இயற்கைக்கு அப்பால் செயற்பட்டஇறைவல்லமையின் அடையாளத்தைக் குறித்து லூக்கா கூறும் சம்பவம்

1. லாசருவை உயிருடன் எழுப்பியது
2. இயேசு 4000 பேரை போஷித்தமை
3. கானாவூர திருமண விருந்து
4. 5000 பேரை போஷித்தல்



kalvi.lk

**15)** நல்ல சமாரியன் உவமையில் இருந்து நாம் பெற்றுக் கொள்ளும் வழிகாட்டல்

1. தமது உடமைகள் குறித்து கரிசனை கொள்ள வேண்டும்
2. தேவை உடையோர்க்கு முழுமனதுடன் உதவி செய்ய வேண்டும்
3. போட்டி மனப்பாண்மையுடன் உதவ வேண்டும்
4. புகழுக்காக உதவ வேண்டும்

**16)** இயேசுவின் வெற்றிகரமான எருசலேம் பயணத்தை முண்ணுதாரணமாக கொள்ளும் ஒரு கிறிஸ்தவன்

1. வெற்றிவாகையுடன் செயற்பட வேண்டும்
2. தாழ்மையாக மட்டும் செயல்பட வேண்டும்
3. சமாதானத்தோடும் சகோதரத்துவத்துடனும் செயல்பட வேண்டம்
4. தெருக்களில் வெற்றிப் பேரொளி எழுப்ப வேண்டும்

**17)** "அகாபே" என்ற சொல்லின் பொருள்

1. அன்பு
2. நீதி
3. இரக்கம்
4. நம்பிக்கை

Education கல்வி අධ්‍යාපන

**18)** ஒருமைப்பாட்டுடன் கூடிய வாழ்வுக்கு ஒவ்வாத விடயமாக அமைவது

1. ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து ஒன்றுபடல்
2. ஜாதி மத இன பேதமின்றி அனைவருக்கும் உதவிக்கரம் நீட்டுதல்
3. நாடுகளுக்கிடையே முரன்பாடு ஏற்படுமாயின் யுத்தத்தின் மூலம் தீர்வு காண இடமளித்தல்
4. உலக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த அமைப்பினை உருவாக்குதல்



kalvi.lk

19) "ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர் விடும்" என மெசியாவின் பிறப்பு குறித்து இறைவாக்குரைத்தவர்

1. எரேமியா
2. ஏசாயா
3. எசேக்கியேல்
4. மீக்கா

20) இயேசு எழுபத்திரண்டு சீடர்களை அனுப்பிய போது எடுத்துச் செல்லக் கூடாதவையாகக் கூறப்படுபவை

1. பணப்பை, வேறுபை ,மிதியடி
2. கைத்தடி ,பை, உணவு
3. பணம், உணவு, மிதியடி
4. கைத்தடி, பணப்பை,வேறுபை

Education கல்வி අධ්‍යාපන

21) "கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டிடத்திற்கு தலைக்கல் ஆயிற்று"எனும் இயேசுவின் வார்த்தை வெளிப்படுத்துவது

1. இயேசுவின் பாடுகள் மற்றும் மரணம் என்பவற்றை
2. இறைவாக்கினர்களின் மரணம் குறித்து யூதர்களின் பாவநிலைமை
3. சதுசேயரால் வெறுக்கப்பட்ட தாம் வெளிப்படும் நாள் தொலைவில் இல்லை என்பதை
4. பரிசேயர் மற்றும் சதுசேயர் மக்களுக்கு இழைக்கும் அநீதிகளை

22) " உமது நம்பிக்கை உம்மை மீட்டது அமைதியுடன் செல்க" என இயேசு கூறியது

1. கானானியப் பெண்ணுக்கு
2. தீப ஆவியால் பீடிக்கப்பட்டு கூன் விழுந்த பெண்ணுக்கு
3. 12 வருடங்கள் எதிர்பார்ப்பை இழந்த பெண்ணுக்கு
4. பாவிப் பெண்ணுக்கு



kalvi.lk

23) திருச்சட்டமும் இறைவாக்கும் இயேசுவில் நிறைவு பெற்ற நிகழ்வு அவர்

1. யோர்த்தான் நதியில் திருமுழுக்கு பெற்ற வேளையில்
2. மலைமீது இயேசு தோற்றம் மாறிய போது
3. இயேசுவே வாழ்கின்ற கடவுள் என்று பேதுரு சான்று பகர்ந்த போது
4. உயிர்த்தெழுந்த பின் சீடர்கள் முன் தோன்றிய போது

24) அமைதி பற்றி ஏசாயா குறிப்பிடுவது

1. அன்புடனும் மகிழ்வுடனும் வாழும் வாழ்வு
2. வெளிவாரியான பிரச்சினைகள் அற்ற நிலை
3. ஒரு நாட்டின் எதிர்காலத்திற்கு உதவியாக அமைவது
4. மனித உள்ளங்களில் ஆழமாக உருவாகும் சமாதானம்

25) இன்று கிறிஸ்தவ திருச்சபையின் முக்கிய ஆயத்துவ பணியாக அமைவது

1. தனது மந்தையை அதிகரித்தல்
2. விடுபட்டவர்களை கண்டு பிடித்து சேர்த்தல்
3. கூடிய மட்டும் தனது மந்தையை போஷித்தல்
4. கிறிஸ்துவின் மந்தையை ஒற்றுமையாக்குதல்

26) பவுலின் கூட்டுத்தலைமைத்துவத்திற்கு சான்றாக அமைவது

1. தீமோத்தேயுவை அழைத்துச் சென்றமை
2. சீலாவை ஏற்றுக் கொண்டது
3. பர்னபாவோடு பணியாற்றியமை
4. யாவும் சரி

27) அர்த்ததமி வழிபாடு காணப்பட்ட இடம்

1. கொரிந்து
2. எபேசு
3. பிலிப்பி
4. கலாத்தி



kalvi.lk

**28)** தமஸ்கு செல்லும் வழியில் பவுலுக்கு ஏற்பட்ட மனந்திரும்புதல் அனுபவத்தின் மூலம் அவர் கற்றுக் கொண்ட முக்கிய விடயம்

1. அவரது வேலை உடன் நிறுத்தப்பட்டது
2. இயேசு அவரை தண்டிக்க ஆபத்தமானவர்
3. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே ஆண்டவர் என்பது
4. அவர் எருசலேமிற்கு திரும்ப வேண்டுமென்பது

**29)** இரவு வேளையில் இயேசுவை காண வந்த நீதிச்சட்டஅறிஞர்

1. கொர்நெலிவு
2. லாசரு
3. அனனியா
4. நிக்கதேமு

**30)** ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சியில் உட்புக இயலாது என இயேசு கூறியது

1. பேதுருவுக்கு
2. திருமுழுக்கு யோவானுக்கு
3. மகதலேனா மரியாளுக்கு
4. நிக்கதேமு

**31)** " இதோ நான் என் தூதனை அனுப்புகின்றேன். அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்" என்ற இறைவாக்கின் முன்னுரைப்பின் படி "என் தூதன்" என குறிப்பிடப்படுபவர்

1. ஏசாயா
2. திருமுழுக்கு யோவான்
3. மோசே
4. இயேசு



kalvi.lk

**32)** பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுவதனை ஊக்குவிக்கும் மெசியா நமக்கு தரும் ஒளியானது

1. இறைவாக்கினரை பின்பற்றுதல்
2. விடுதலைப் போராட்டம்
3. உண்மைக்காக போராடுதல்
4. பாவக்கட்டுகளை இறுத்தல்

**33)** புதிய ஏற்பாட்டின் படி முதன் முறையாக தூய ஆவியின் வல்லமையை அனுபவித்தமை

1. பாஸ்கா ஞாயிறு எம்மாவூர் பயணத்தில்
2. பெந்தேகோஸ் தினத்தில்
3. கிறிஸ்து பிறந்த வேளையில்
4. கெத்சமனேயின் விண்ணப்பத்தில்

Education
கல்வி
අධ්‍යාපන

**34)** துன்புறும் பணியாளராக இயேசுவை காட்டும் இறைவாக்கினர்

1. ஏசாயா
2. எரேமியா
3. எசேக்கியல்
4. மீக்கா

**35)** எருசலேம் தேவாலயத்தின் எப்பகுதியில் கடவுள் வீற்றிருப்பதாக நம்பினர்

1. அதிதூய இடம்
2. யூத ஆண்களுக்கான இடம்
3. தூய இடம்
4. யூத பெண்களுக்கான இடம்



kalvi.lk

**36)** முதன் முதல் யூதரல்லாத பிற இனக் கிறிஸ்தவர்கள் அங்கம் வகித்த கிறிஸ்தவ சபை

1. சீரிய அத்தியோகியாவின் சபை
2. கொரித்து சபை
3. பிசிதியா அந்தியோக்கியர் சபை
4. தெசலோனிக்கேயர் சபை

**37)** கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பு கிறிஸ்துவின் சபைக்குக் காட்டும் அன்பைப் போல் காணப்பட வேண்டும் என எழுதப்பட்டுள்ள திருமுகம்

1. கொரிந்தியர்
2. எபேசியர்
3. உரோமையர்
4. கலாத்தியர்

Education
கல்வி
අධ්‍යාපන

**38)** பேதுருவின் தலைமைத்துவத்தின் ஆரம்பமான திருச்சபையானது தனது சான்றை உலகிற்கு வெளிப்படுத்திய முக்கிய பிரிவுகளாவன

1. மறைதூதும்பணி, உதவி வழங்கும் பணி
2. செபவாழ்வு, மறைதூதுப்பணி
3. உதவி வழங்கும் பணி, செபவாழ்வு
4. மறைதூதுப்பணி, நலன் புரிப்பணி



kalvi.lk

39) எருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்படுவதற்கு காரணமாக இருந்த விடயம்

1. விருத்தசேதனம்
2. திருமுழுக்கு
3. ஓய்வு நாள் பற்றிய பிரச்சினை
4. யாவும் சரி

40) எருசலேம் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்லாதது

1. பரத்தமையை விலக்குதல்
2. சிலைகள் தொடர்பான தீட்டானவற்றை தவிர்த்தல்
3. கழுத்து நெரிக்கப்பட்டு செத்தவை இரத்தத்தை உணவாகக் கொள்வதை தவிர்த்தல்
4. விருத்தசேதனம்செய்தலைத் தவிர்த்தல்

(1×40=40) புள்ளிகள்

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

## பகுதி -II

➢ **முதலாம் வினாவிற்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1)

1. ஏசாயா இறைவாக்கினரால் முன்வைக்கப்பட்ட துன்புறும் ஊழியரைக் குறித்த விடயங்களுள் இரண்டினை குறிப்பிடுக?

2. அ) தனது வினாக்களுக்கு விடை தேடி இரவில் இயேசுவைக் காண வந்த யூதத் தலைவர் யார்?

   ஆ) இயேசுவின் விடையில் இருந்து நாம் கற்றது என்ன?

3. “ இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன்” எனும் இறைவாக்கு எவ் இறைவாக்கினரால் யாரைக் குறித்து கூறப்பட்டது?

4. முதலாம் மறைத்தூதுப் பயணம் மேற்கொள்ளப்கட்ட இடங்கள் இரண்டு தருக?

5. இயேசு பன்னிரண்டு சீடர்களை அனுப்பிய போது அவர்களுக்கு வழங்கிய அதிகாரங்கள் எவை?

6. திருத்தூதர் பணி நூலில் “சவுல்” முதன் முதலாக “பவுல்” என்ற கிரேக்கப் பெயரில் எந்த இடத்தில் அறிமுகப் படுத்தப்படுகிறார்?



kalvi.lk

7. “ இயேசு தமது வாழ்வில் யூத சம்பிரதாயங்களை கடைப்பிடித்து வாழ்ந்தார்” என்பதற்கு இரண்டு உதாரணங்கள் குறிப்பிடுக?

8. உலகெங்கும் கொடிய பஞ்சம் ஏற்படப்போகிறது என இறைவாக்குவைத்தவர் யார்? இப் பஞ்சம் எம் மன்னன் காலத்தில் ஏற்பட்டது?

9. பவுல் லீஸ்திராவில் செய்த புதுமையை குறிப்பிடுக?

10. “ரபி நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர்” என இயேசுவிடம் கூறியவர் யார்?

Education கல்வி

(20 புள்ளிகள்)

**2)**

1. பவுல் எதென்சில் எப்பெயரினைக் கொண்ட பலழபீடத்தின் ஊடாக தனது இறை செய்தியை வழங்கினார்?

2. பவுலின் 3 வது மறைத்தூதுப் பணியின் போது எபேசில் இடம்பெற்ற முக்கிய சம்பங்கள் 3 எழுதுக?

3. துன்பங்களின் மத்தியில் நீர் துணிவுடன் சான்று பகர வேண்டி ஏற்படின் நீர் எவ்விதம் செயற்படுவீர் என்பதனை 4 கருத்துக்கள் ஊடாக ெழுதுக?

(10 புள்ளிகள் )



kalvi.lk

3)

1. கெத்சமனே தோட்டத்தில் இயேசுவின் ஜெபத்தின் முக்கிய வேண்டுதல் யாது?

2. பிலாத்து முன்னிலையில் இயேசுவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் 3 ஐக் குறிப்பிடுக?

3. தமக்காக மரித்த இயேசுவின் அர்ப்பணிப்பான வாழ்விலிருந்து நாம் பெறும் படிப்பினைகள் ஐந்தினை தருக?

( 10 புள்ளிகள் )

4)

1. இறையரசின் கொள்கைகளை வெளிப்படுத்தும் உவமைகள் 2 தருக?

2. பெரிய விருந்து உவமை மூலம் பெறப்படும் முக்கிய கருத்துக்கள் மூன்றினை முன்வைக்குக?

3. இன்றைய உலகில் இறையரசின் வளர்ச்சிக்கு தடையாக அமையும் காரணிகள் 2 ஐக் குறிப்பிட்டு அத்தகைய தடைகளை நீக்க மேற்கொள்ளக் 4டிய வழிமுறைகரள முன்வைக்குக?

( 10 புள்ளிகள் )



kalvi.lk

5)

1. இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தினர் அனுபவித்த துன்பங்கள் 2 தருக?

2. சதுசேயரால் இயேசுவுக்கு ஏற்பட்ட சவால்கள் 2 இனைக் குறிப்பிடுக?

3. உமது வாழ்வில் நீர் எதிர்கொண்ட சவால்கள் இரண்டினை முன்வைத்து அவற்றை எவ்வாறு வெற்றி கொண்டீர் என்பதை விபரிக்குக?

( 10 புள்ளிகள் )

6)

1. இயேசு அன்பு குறித்து கூறிய இரு பிரதான கட்டளைகளை குறிப்பிடுக?

2. அன்பு பற்றி கொரிந்தியரில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் 3 இனை குறிப்பிடுக?

3. மனிதநேயம் நலிவடைந்து செல்லும் இன்றைய சமூகத்தில் அன்பு நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் எவை?

( 10 புள்ளிகள் )

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

**7)** விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக?

1. ஆதிக் கிறிஸ்தவ சபையின் செயற்பாடுகள்
2. மன்னிப்பு
3. பவுலின் பணி
4. நல்லாயன்
5. திருச்சட்டத்தின் மையம் அன்பு

( 10 புள்ளிகள் )

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk